©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 33] CHENNAI, WEDNESDAY, AUGUST 19, 2026
Aavani 2, Parabhava, Thiruvalluvar Aandu–2057

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

**CONTENTS**

| | Pages. |
|---|---|
| PUBLIC DEPARTMENT | |
| மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 – அதிகாரப்பூர்வ அறிவிப்பு | 34-35 |
| TAMIL DEVELOPMENT AND INFORMATION DEPARTMENT | |
| Mandating the use of Aadhaar Authentication for verification of beneficiaries of Name Change / Name Alteration Section 4 of Aadhaar (Targeted Delivery of Financial and Other Subsidies, Benefits and Services) Act, 2016 .. .. .. | 35-36 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

PUBLIC DEPARTMENT

### மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 - அதிகாரப்பூர்வ அறிவிப்பு

*(Letter No. 53/LO/2026-6, Dated: 13.08.2026.)*

No. II(1)/PULO/15/2026.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது நாட்டின் மிகப் பெரிய நிர்வாகச் செயல்முறையாகும். இதன் மூலம் நாட்டின் மொத்த மக்கள் தொகை மற்றும் பல்வேறு சமூக–பொருளாதார விவரங்கள் குறித்த புள்ளிவிவரங்கள் அறியப்படுகின்றன.

இப்பணி, 1948–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டம் (1948 ஆம் ஆண்டின் சட்ட எண் 37), 1990–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு விதிகள் மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட சட்டத் திருத்தங்களின் படி மேற்கொள்ளப்படுகிறது.

2027–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான ஆயத்தப் பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன. அதற்கான முதல் கட்டப் பணி – வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு – அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின், உள்ளூர் சூழ்நிலைக்கேற்ப 2026 ஏப்ரல் முதல் 2026 செப்டம்பர் வரை நடைபெற உள்ளது.

தமிழ்நாட்டில் இப்பணி 01–08–2026 முதல் 30–08–2026 வரை நடைபெறும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பின் இரண்டாம் கட்டப் பணி 2027–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற உள்ளது.

**ஒத்துழைப்பு மறுப்பு மற்றும் தண்டனைகள்**

1948–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டத்தின் பிரிவு 11–இன் படி, கணக்கெடுப்பிற்கு ஒத்துழைக்காத பொது மக்களின் மீது குறிப்பிட்ட சில தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. இச்சட்டத்தின் முக்கியமான பிரிவுகளை காணலாம்;

1948–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டத்தின் படி பொதுமக்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள்.

(அ) 1948–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டத்தின் பிரிவு 8 – கேள்விகள் கேட்பது மற்றும் பதிலளிப்பதற்கான கடமை.

**பிரிவு 8 – கேள்விகள் கேட்பது மற்றும் பதிலளிப்பதற்கான கடமை**

(1) மத்திய அரசால் இத்தொடர்பாக வெளியிடப்பட்டு, அதிகாரப்பூர்வ அரசிதழில் (Official Gazette) பிரசுரிக்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, ஒரு மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரி, தனக்கு நியமிக்கப்பட்டுள்ள பகுதிக்குள் உள்ள அனைத்து நபர்களிடமும், அந்த அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்ட கேள்விகளை கேட்கலாம்.

(2) உட்பிரிவு (1)–இன் கீழ் கேள்வி கேட்கப்படும் ஒவ்வொரு நபரும், தமக்குத் தெரிந்த அளவிலும் தாம் நம்புகின்ற வரையிலும், அந்தக் கேள்விகளுக்கு சட்டப்படி பதிலளிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

(3) எனினும், எந்த நபரும் தனது குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினரின் பெயரைக் கூறக் கட்டாயப்படுத்தப்படமாட்டார்; அதேபோல், எந்தப் பெண்ணும் தனது கணவர், மறைந்த கணவர் அல்லது வழக்கப்படி பெயரைக் குறிப்பிடத் தடைசெய்யப்பட்ட வேறு எந்த நபரின் பெயரையும் கூறக் கட்டாயப்படுத்தப்படமாட்டார்.

**பிரிவு 9 – குடியிருப்பைப் பயன்படுத்துபவர், மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரி அந்த இடத்திற்குள் நுழையவும் கணக்கெடுப்பு எண்களை குறிக்கவும் அனுமதிக்க வேண்டும்.**

(1) ஏதேனும் ஒரு வீடு, வேலியிடப்பட்ட இடம், கலன் (கப்பல்/படகு) அல்லது பிற இடத்தில் வசிப்பவர் அல்லது அதனைப் பயன்படுத்துபவர், மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளுக்குத் தேவைப்படும் வகையில், கணக்கெடுப்பு அதிகாரிகள் அந்த இடத்திற்குள் நுழைய அனுமதிக்க வேண்டும்; மேலும், கணக்கெடுப்பு நோக்கங்களுக்காகத் தேவைப்படும் எழுத்துக்கள், குறியீடுகள் அல்லது எண்களை அந்த இடத்தில் எழுதவோ அல்லது ஒட்டவோ அவர்களை அனுமதிக்க வேண்டும்.

**பிரிவு 11 – அபராதங்களும் தண்டனைகளும்.**

(1) மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் அல்லது கணக்கெடுப்பை மேற்கொள்வதற்குச் சட்டப்படி உதவி செய்ய வேண்டிய எந்தவொரு நபரும், இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட எந்தவொரு விதியின்படியோ அவர் மீது சுமத்தப்பட்ட எந்தவொரு கடமையையும் செய்ய மறுத்தால், அல்லது அத்தகைய கடமையை செய்வதில் மற்றொரு நபரைத் தடுக்கும் அல்லது இடையூறு செய்யும் எந்தவொரு நபரும், அல்லது

(2) மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் அல்லது கணக்கெடுப்பை மேற்கொள்வதற்குச் சட்டப்படி உதவி செய்ய வேண்டிய எந்தவொரு நபரும், அவர் மீது சுமத்தப்பட்ட எந்தவொரு கடமையையும் செய்வதில் அல்லது இந்த சட்டத்தின்படியோ அல்லது அதன்

கீழ் உருவாக்கப்பட்ட எந்தவொரு விதியின்படியோ அவருக்கு பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவுக்கும் கீழ்ப்படிவதில் நியாயமான விடாமுயற்சியைப் பயன்படுத்தத் தவறினால், அல்லது அத்தகைய கடமையைச் செய்வதில் அல்லது அத்தகைய உத்தரவுக்குக் கீழ்ப்படிவதில் மற்றொரு நபரைத் தடுக்கும் அல்லது இடையூறு செய்யும் எந்தவொரு நபரும், அல்லது

(3) மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலரால் கேட்கப்பட்ட எந்தவொரு கேள்விக்கும், பிரிவு 8–இன் படி சட்டப்படி பதிலளிக்கக் கடமைப்பட்டிருந்தும், வேண்டுமென்றே தவறான பதிலை அளித்தால் அல்லது தனது அறிவு அல்லது நம்பிக்கையின்படி பதிலளிக்க மறுத்தால், அல்லது

(4) ஏதேனும் வீடு, அடைக்கப்பட்ட இடம், கப்பல் அல்லது பிற இடத்தில் வசிக்கும் ஒருவர், பிரிவு 9–இன் கீழ் மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரி அந்த இடத்திற்குள் நுழைய அனுமதி அளிக்க மறுத்தால், அல்லது

(5) மக்கள் தொகை கணக்கெடுப்பு நோக்கங்களுக்காக வரையப்பட்ட அல்லது ஒட்டப்பட்ட எழுத்துக்கள், குறியீடுகள் அல்லது எண்களை அகற்றுபவர், அழிப்பவர், மாற்றுபவர் அல்லது சேதப்படுத்துபவர், அல்லது

(6) பிரிவு 10–இன் கீழ் விவரப் படிவத்தை (schedule) பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்ட ஒருவர், போதுமான காரணமின்றி வேண்டுமென்றே அப்பிரிவின் விதிமுறைகளைப் பின்பற்றத் தவறினால் அல்லது அதன் கீழ் தவறான தகவலை அளித்தால், அல்லது

(7) மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைபவர், ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்; மேலும் பகுதி (அ)–வின் கீழ் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டால், மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்படலாம். உட்பிரிவு (1)–இன் கீழ் வரும் ஏதேனும் ஒரு குற்றத்தைச் செய்யத் தூண்டுபவர், ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்.

**பிரிவு 15 – ரகசியத்தன்மை – மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவுகள் ஆய்வுக்கு உட்பட்டவை அல்ல அல்லது சாட்சியமாக ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்ல.**

மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் ஒருவர் தனது கடமையை செய்யும்போது தயாரித்த எந்தவொரு புத்தகம், பதிவேடு அல்லது பதிவையோ அல்லது பிரிவு 10–இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு விவரப் படிவத்தையோ (schedule) ஆய்வு செய்ய எந்தவொரு நபருக்கும் உரிமை இல்லை. மேலும், 'Bharatiya Sakshya Adhiniyam, 2023' (2023–இன் 47)–இல் முரணான எதுவொன்று கூறப்பட்டிருந்தாலும், அத்தகைய புத்தகம், பதிவேடு, பதிவு அல்லது விவரப் படிவத்தில் உள்ள எந்தவொரு பதிவும், எந்தவொரு உரிமையியல் வழக்கிலோ அல்லது இச்சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படும் செயல் அல்லது செயல் தவிர்ப்பு தொடர்பாக இச்சட்டம் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் தொடரப்படும் வழக்கு தவிர்த்த பிற குற்றவியல் நடவடிக்கைகளிலோ சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படாது.

2027–ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு டிஜிட்டல் முறைகள் மூலம் நடத்தப்படும். மேலும், வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு (HLO) தொடர்பான களப்பணிகள் தொடங்குவதற்கு முந்தைய 15 நாட்களுக்கு 'சுய–கணக்கெடுப்பு' (Self–Enumeration – SE) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. *மாநில அரசிதழில்* அறிவிக்கப்பட்டுள்ளபடி, தமிழ்நாடு மாநிலத்திற்கான சுய–கணக்கெடுப்பு காலமானது 2026 ஜூலை 17 முதல் 2026 ஜூலை 31 வரை ஆகும். எனவே, இதன்மூலம் தமிழ்நாட்டு மக்கள் சுய–கணக்கெடுப்பு இணையதளம் (portal) வாயிலாகத் தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9.

**இ. சுந்தரவல்லி,**
*அரசு செயலாளர்.*

TAMIL DEVELOPMENT AND INFORMATION DEPARTMENT

**Mandating the use of Aadhaar Authentication for verification of beneficiaries of Name Change / Name Alteration Section 4 of Aadhaar (Targeted Delivery of Financial and Other Subsidies, Benefits and Services) Act, 2016 (Central Act 18 of 2016)**

*[G.O. Ms. No.140, Tamil Development and Information (S&P2.1), 13th August 2026, ஆடி 28, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு - 2057.]*

No. II(1)/TDI/16/2026.—

WHEREAS the use of Aadhaar number to establish identity which enables individuals to receive subsidies, benefits and services in a convenient and seamless manner, obviates the need for multiplicity of documents to establish identity, simplifies processes and promotes transparency and efficiency;

AND WHEREAS the Ministry of Electronics and Information Technology, Government of India, and the Unique Identification Authority of India (UIDAI), have conveyed their authorisation (for the application of the Government made in letter Ref.No.SWIK/2025/08/375, dated 13.08.2025) *vide* letter eF.No. 13(6)/2021-EG.II, dated 29.09.2025 respectively for the purposes prescribed under sub-rule (1) of rule 3 of the Aadhaar Authentication for Good Governance (Social Welfare, Innovation, Knowledge) Rules, 2020 (hereinafter referred to as the said rules) that the said Commissioner, Stationery and Printing Department may be allowed to perform authentication and also the use of Aadhaar number during authentication

for establishing identity of Aadhaar number holder and notify the same under rule 5 of the said rules read with sub-clause (ii) of clause (b) of sub-section (4) of section 4 of the Aadhaar (Targeted Delivery of Financial and Other Subsidies, Benefits and Services) Act, 2016 (Central Act 18 of 2016) (hereinafter referred to as the said Act);

AND WHEREAS, the Aadhaar authentication shall be performed in respect of citizens /residents pertaining to the Gazette Publication of change of Name (English and Tamil) *Tamil Nadu Government Gazette* as prescribed under sub-rule (1) of rule 3 of the said Rules and the performance of Aadhaar authentication for the said purpose shall be on voluntary basis and that the said Commissioner, Stationery and Printing Department shall perform the Aadhaar authentication only to establish the identity of residents of Tamil Nadu applying for change of name through the Gazette notification published by the State Government.

NOW, THEREFORE, in pursuance of rule 5 of the said rules read with sub-clause (ii) of clause (b) of sub-section (4) of section 4 of the said Act, the Government hereby notifies the following, namely:

1. (1) The Commissioner, Stationery and Printing Department shall obtain the consent of the Aadhaar number holder for the purpose of authentication herein;

(2) As per sub-rule (2) of Rule 3 of the said rules, Aadhaar authentication is on voluntary basis and the Commissioner, Stationery and Printing Department shall inform the Aadhaar number holder of any one of the below mentioned alternate and viable means of identification and shall not deny any service to the Aadhaar number holder for refusing to, or being unable to, undergo Aadhaar authentication, namely:

a. Bank or Post Office Pass book with Photo;

b. Permanent Account Number (PAN) Card;

c. Passport;

d. Ration Card;

e. Voter Identity Card; and

f. Driving Licence issued by the licensing authority under the motor vehicles Act, 1988 (Central Act 59 of 1988)

2. This Notification shall come into effect from the date of its publication in the *Tamil Nadu Government Gazette.*

V. RAJARAMAN,
*Secretary to Government.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU